Registered as a News Paper in Ceylon P. M. G. No. H. A. 9/300 of 1953.

விரோதி௵ (1889) ஆவணி மீ 28உ ஆரம்பமானது.

இந்து சாதனம்

சிவமயம்

வெள்ளிதோறும் வெளிவருவது

தனிப்பிரதி விலை: சதம் 10.

[புத்-எடு] யாழ்ப்பாணம்:- சோபகிருது௵ புரட்டாதி மீ ௪உ வெள்ளிக்கிழமை (20 September. 1963) [இல-உடு

கண்ணின் மகிமை

"கண்ணிற் சிறந்த
உறுப்பில்லை"

என்பது பெரியோர் வாக்கு. இறைவன் அடியவருக்காகக் கொண்ட அருள் உருவங்கள் பல. அந்த உருவங்களின் சிறப்பைக் கண்டு களிகூரக் கண்கள் மிக அவசியமானவை. உலகத்திலே உள்ள கண்ணுக்கினிய இயற்கைக் காட்சிகளில் இறைவனின் பெருமையைக் காண்கிறான் புலவன். ஓடையிலே ஊறும் தீஞ்சுவைத் தண்ணீர், தண்ணீரிடை மலரும் வாசனை வீசும் மலர், நிழல் தரும் மரம், இவற்றைக் காணும் அறிவுடை ஒருவன் உள்ளத்திலே இறைவனைக் காணும் உணர்ச்சியேஉண்டாகின்றது.

சிவ தீட்சையில் இந்தக் கண்கள் பிரதான அங்கம் வகிக்கின்றன. நயன தீட்சை என்பது தீட்சை வகைகளில் ஒன்று. ஆசாரியன் பஞ்சாட்சர செபப் பயிற்சியினால் தன்னைச் சிவமாகப் பாவித்து சீடனுடைய சிரசு தொடங்கிக் கால்வரையும் அருட் பார்வை பார்த்து அவனது ஆணவ வலியை அடக்கிவிடுகிறான். விடத்தை இறக்கும் மாந்திரீகனும் தமது கண்களகத்தே அருள் வலிமையைக் கொடுத்துக் கண்களின் பார்வையாலே விடத்தை இறக்கி விடுகிறான்.

மக்களின் உள்ளக் கருத்துக்களைக் கண்கள் வெளியாகக் காட்டி விடுகின்றன. காதல், கருணை, கோபம் வெறுப்பு முதலிய பல வித உணர்ச்சிகளைக் கண்கள் காட்டும் தன்மையுடையன. மாயை என்பாளின் பொதுச் சிறப்பு என்னும் இருவகைப் பார்வையிலே இறைவனின அருட் செயல்களின் தன்மையைக் கண்டார் காசிபமுனிவர். இறைவனை வணங்கும் போது கண்களே முதலிடம் பெறுகின்றன.

சிதம்பரத்திலே திருநடனம் செய்யும்நடராசப்பெருமானை ஒரு அடியார் வணங்கும் போது ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள" என்று வருணிக்கிறார் சேக்கிழார். அவ்வாறே வணங்கினாலும் இறைவனை அளவில்லாத காலம் பார்த்து நின்றாலும் வெறுக்காது கண்கள் பெற்ற பயன் அவ்வாறு இறைவனைத் தரிசித்தலேயாம்.

"சீர்க்கும ரேசன் கொண்ட
திருப்பெரு
வடிவந் தன்னில்
ஏர்க்குறும் ஒளியும் சீரும்
இளமையும் எழிலுமெல்லாம்
ஆர்க்குள உலகில் அம்மா
அற்புதத் தோடும் பல்காற்
பார்க்கினும் தெவிட்டிற் றில்லை
இன்னுமென் பார்வைதானும்"

என்று முருகப்பெருமானது உருவத்தைத் தரிசித்த சூரபன்மன் கூறுகிறான் இறைவனது உருவம் எண்ணினும் அடங்காது, கண்ணினும் அடங்காது இறைவன் நம்மேல் அருள்கொண்டு வெளிப்பட்டுக் காட்சியை நல்குமேல் நாம் அதனை அறிந்துகொள்ளலாம். சூரியனது ஒளி எங்கும் பிரகாசித்தாலும் கூகையின்கண்களுக்கு அந்த ஒளி தோற்றாது. அதுபோல இறைவனது அருள் ஞானத்தைக் கொண்டு காண முடியாத ஆன்மாக்களுக்கு இறைவனது பிரகாசம் தோற்றாது. ஞான அறிவில்லாத கண்கள் உலக அழகிலே மயங்கும். இறை அழகிலே மயங்க மாட்டாது. இதனை,

ஸ்ரீ வ. குகசர்மா

"பொல்லா இருளகற்றுங் கதிர்
கூகையென் புட் கண்ணினுக்கு
அல்லா யிருந்திடு மாறொக்கு
மேயறி வோருளத்தில்
வல்லா ரறிவா ரறியார் தமக்கு
மயக்கங் கண்டாய்
எல்லாம் விழியக் கேயிறை
வாகச்சி யேகம்பனே"

என்று பட்டினத்தார் கூறினார்.

இதனாலே கற்றவரின் கண்களே உண்மையான கண்கள் என்று கூறிப் போந்தனர் பெரியார். நல்லவர் நல் அறிவையும் தெளிந்தநீர்வாவியின் நீர்ச் சிறப்பை அந்நீரிலே வளரும் தாமரை முதலியவற்றின் பசிய இலைகள் மறைத்து விடுவது போன்று புலன் திரைகளின் புணர்ப்பு மறைத்துவிடும் புலன்களின் வசப்படாத அடியார்களோ தாங்கள் என்றும் நன்னெறியில் நின்று வழுவா வண்ணம் மனதிலும் கண்ணிலும் இறைவனது திருவுருவை வைத்துப் போற்றினார்கள் "ஏகம்பன்காண் அவனென் எண்ணத்தானே" "காளத்தியான் அவனென் கண்ணுள்ளானே" என்னும் அப்பர் வாக்குகள் இதனை வலியுறுத்தும்,

கண் என்பதற்கு ஞான அறிவு எனவும் பொருள் கொள்ளலாம். அறிவில்லாதாரின் கண்கள் புண்கள் என்பது ஆன்றோர் கருத்து

அறிவுடை யாரகத்திலே இறைவன் நிற்பான் அவர்களுக்குக் காட்சி கொடுப்பான். நாம் பெற்ற அறிவின் பலன் இறைவனைக் காதலிப்பதாகும். அவ்வாறு காதலிப்பார்க்கு நன்னெறி காட்டுவான் இறைவன். இதனாலே திருமூலரும்,

"பண்ணகத் தின்னிசை
பாடலுற்றானுக்கே
கண்ணகத்தே நின்று
காதலித்தேனே"

என்று கூறினார்.

நற்சிந்தனை

—:—

ஓமெனு மெழுத்தினுள்ளே
ஒளியதாய் விளங்குகின்ற
சோமசுந் தரத்தின் அடி
தொழுவ தெக்காலம்.

சேவை நலம் பாராட்டு விழா

நாளை மறுதினம் (22-9-63 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5 மணியளவில் அராலி அகாயக்குள விதாயகராலய முன்றிலில் அராலி கிராமாதிகாரியாகப் பல காலங் கடமையாற்றியதோடமையாது பல பொதுச் சேவைகளுஞ் செய்து இளைப்பாறிய திரு. இ. நாகலிங்கம் அவர்கள் நலனைப் பாராட்டி, ஓர் விசேட பொதுக் கூட்டம் நடைபெறுகிறது.

பலாலி - வயாவிளான் கி மு சங்கம்

சென்ற 14-9-63 ல் நடைபெற்ற பலாலி வயாவிளான் கி. மு. சங்கத்தினரின் வருடாந்தக் கூட்டத்தில் புதிய செயற்குழு உறுப்பினர் தெரிவு நிகழ்ந்தது. அவர்களுள் தலைவர்: ஆசிரியர் திரு சீ இராமலிங்கம் செயலாளர் திரு. செ. மகாராசா பொருளாளர்: திரு. செ. உலகநாதன் ஆவர்.

எல்லா வுலகமு மானாய் நீயே ஏகம்ப மேவி யிருந்தாய் நீயே
நல்லாரை நன்மை யறிவாய் நீயே ஞானச் சுடர்விளக்காய் நின்றாய் நீயே
பொல்லா வினைக ளறுப்பாய் நீயே புகழ்ச் சேவடி யென்மேல் வைத்தாய் நீயே
செல்வாய செல்வம் தருவாய் நீயே திருவையா றகலாத செம்பொற் சோதீ

கற்பனை கடந்தசோதி கருணையே யுருவமாகி
அற்புதக் கோலநீடி யருமறைச்சிரத்தின் மேலாஞ்
சிற்பர வியோமமாகுந் திருச்சிற்றம்பலத்துள் நின்று
பொற்புடன் நடஞ்செய்கின்ற பூங்கழல் போற்றிபோற்றி.

கந்தையாபிள்ளை நிறுவிய கலைக்கோயில்

சைவப் பற்றினால் பிறந்து சைவப் பற்றினால் வளர்ந்தது

[கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஸ்தாபகர் நினைவு விழாவில் திரு. எஸ். நடேசபிள்ளை ஆற்றிய உரை]

யாழ்ப்பாணத்திலுள்ள சிறந்த கல்லூரிகளில் ஒன்றாக இன்று ஸ்கந்தவரோதயக் கல்லூரி விளங்குகின்றது. இலங்கையிலுள்ள பெரிய கல்லூரிகளில் இதுவும் ஒன்றாக மதிக்கப்படுகின்றது. இதை நிறுவிய திரு. கந்தையா அவர்களுக்கு ஏற்ற ஞாபகச்சின்னமாக இது நிலவுகின்றது. அவர்கள் கந்தரோடை ஆங்கிலக் கலாசாலை என்ற பெயருடன் இதை நிறுவிய காலத்தில் இது சிறிய பள்ளிக்கூடமாக இருந்தது. திரு கந்தையா அவர்களின் ஆர்வமே இதற்கு உயிர் கொடுத்தது. அவர்களது இடையறாத முயற்சியினாலேயே இது வளர்ந்தது. இப் பள்ளிக்கூடத்துக்காகவே அவர்கள் வாழ்ந்தார்கள் என்று கூறுவது மிகையாகாது. இதன் அபிவிருத்தியே அவர்களுக்கு அல்லும் பகலும் நினைவாக இருந்தது. அவர்கள் இருந்த காலத்தில் ஒரு பள்ளிக்கூடத்தை நடத்துவது செயற்கரிய செயலாக இருந்தது. பொருள் வருவாய் அதிகம் இல்லாத பள்ளிக்கூடமாகப் பல இன்னல்களுக்கிடையில் இது தவித்துக் கொண்டிருந்த காலத்திலும் அவர்கள் மனந்தளராமல் இதைப் பரிபாலித்தார்கள். அக்காலத்தில் இங்கு ஆசிரியர்களாக இருந்தவர்களும் அவர்களிடம் அதிக விசுவாசம் உடையவர்களாய் அவர்களுக்குத் துணையாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

திரு. கந்தையா அவர்கள் தீவிர சைவஉணர்ச்சி படைத்தவராய் வாழ்ந்தனர். சைவ சமய நூல்களை அவர்கள் நன்கு கற்று, கற்றதற்கமைந்த ஒழுக்கத்துடன் வாழ்ந்தார்கள். அவர்களது வாழ்க்கை ஆடம்பரமற்றதாய் இருந்தது. ஆனால் அவர்களது தெய்வ நம்பிக்கையும், திடபக்தியும் அவர்களுடைய வாழ்க்கைக்கு ஒளி அளித்தன. அவர்களது சைவ சமயப்பற்றே இக்கல்லூரியை நிறுவுதற்குக் காரணமாயிருந்தது. இக்கல்லூரி இன்று அடைந்துள்ள உன்னத நிலையை அவர்கள் பார்க்கக் கிடைத்திருப்பின், அவர்கள் உள்ளம் பூரித்திருக்கும். அவர்களின் காலத்துக்குப் பின்னர் அவர்களுடைய உறவினரும், முதுபெரும் புரவலரும் ஆகிய திரு. சுப்பிரமணியம் அவர்கள் இக்கல்லூரியின் பொறுப்பை

(தொடர்ச்சி 4 பார்க்கம்)

உ
சிவமயம்

சமய பாடத் தேர்தல்

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாரால் ஆண்டுதோறும் நடத்தப்படும் சமயபாடப் பரீட்சை வருகிற மார்கழி (December) மாத நடுப்பகுதியில் நடத்தப்படும்.

தேவாரம், உபந்நியாசம், புராணபடனம் ஆகிய மூன்றும் தேர்தலுக்குரிய பாடங்களாகும். தேர்தல் மேற்பிரிவு, மத்திய பிரிவு. கீழ்ப்பிரிவு, ஆரம்பபிரிவு என்ற பாகுபாடுகளையுடையது. ஒவ்வொரு பிரிவுக்கும் மூன்று பரிசில்கள் ஷை சபையாதரவில் மார்கழி மாதத்தில் நடைபெறும் அகில இலங்கை சைவ மகாநாட்டில் சித்தி பெறும் பிள்ளைகளுக்கு வழங்கப்படும். பெண் பிள்ளைகளுக்கும், ஆண் பிள்ளைகளுக்கும் வெவ்வேறு பரீட்சைகள் வைத்துப் பரிசில்கள் வழங்கப்படும்,

பிரவேசப்பணம்:—	ஆரம்ப பிரிவு	— 50
	கீழ்ப்பிரிவு	— 75
	மத்திய பிரிவு	—1-00
	மேற்பிரிவு	—1-25

தேர்தல்களிற் பங்குபற்ற விரும்பும் பிள்ளைகள் தங்கள் பெயரையும் வயதையும் குறித்துத் தலைமையாசிரியருடைய கைச்சாத்துடன் நுழைவுப்பத்திரங்களை 30-9-63 - க்கு முன் கீழ்க்காணும் விலாசத்துக்கு அனுப்புவார்களாக,

பாடவட்டவணை வேண்டுவோர் எழுதிப்பெற்றுக்கொள்க.

சைவபரிபாலன சபை,
யாழ்ப்பாணம். 16-8-63.

மு. மயில்வாகனம்,
சமயப்பிரசார அமைச்சர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE HINDU ORGAN

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம்
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லா மரனாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

இந்துசாதனம்

சோபகிருது ௵ புரட்டாதி மீ
௪௨ வெள்ளிக்கிழமை

அல்லல் என்செயும்?

மாணாக்கர்களுக்குரிய விழா பரிசில் வழங்கும் வைபவம். பெற்றாரும் கற்றுத் தேற வழிகாட்டிய ஆசிரியர்களும் அந்நிகழ்ச்சியில் மட்டற்ற மகிழ்ச்சியெய்துவர். பரிசில் விழாப் பேருரை நிகழ்த்த வழைக்கப்பெறும் பெரியார் உரிய முறையில் ஊக்க மொழி உரைத்து உவகை ஊட்டுவது வழக்கம். ஆனால் கல்விப் பண்பும் கலைச் சால்பும் பொருந்தி வளர்ந்து எழுபத்து நான்கு ஆண்டுகள் நிரம்பி நிற்கும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, விரித்துரைக்கின் ஐந்தாங் குரவரின் சற்போதனையால் அன்னாரின் சீடர்கள் சைவ பரிபாலன சபையாகச் செயலாற்றி நிறுவிய கழகம், இவ்வாண்டு நிகழ்த்திய பரிசளிப்புவிழா தனிச் சிறப்புடையதாயமைந்தது குறிப்பிடத்தக்கது. உரையாற்றுவதற்கு அக்கல்லூரியின் உத்தம மாணாக்கர்களுள் ஒருவராகவும் கல்விப் பேறும் நல்லொழுக்கச் செம்மையும் திகழ்ந்து விளங்குபவராகவும் உள்ள திரு. வீ. சிவ சுப்பிரமணியம் அவர்களை விழாப் பொறுப்பாளர் அழைத்தமையும் இந்துக் கல்லூரியின் எழுச்சிக் கயராதுழைத்த முன்னைநாள் அதிபர் குமாரசுவாமி அவர்கள் நினைவு மன்றமாக அமைக்கப்பெற்ற மகாமண்டபத்தில் நிகழ்ச்சி நடைபெற்றமையும் சிறப்புக்குரியனவென்றாலும் அன்று கல்லூரி அதிபர் எடுத்துரைத்த கருத்துக்களும் பேருரையாளர் சொற்பெருக்கில் முத்துக்கள் போன்று விளங்கிய தூய போதனைகளும் தனி மதிப்புக்குக் காரணமாயினவெனலாம்.

ஆங்கிலத்தில் அழகுற அமைத்த அணி பொலிந்த மொழிகள் அத்தனையும் மணிமணியாக ஆழ்ந்த கருத்துக்களின் மெய் ஒளியை வீசியவண்ணமிருந்தன. சைவ சித்தாந்தக் கருத்தின் பெருமையை வியந்து ஆங்கிலேயப்புலவர் இறை வழிபாட்டை நன்கு புலப்படுத்தினார் என்று பேச்சாளர் சொல்லாமற் சொல்லி 'அல்லல் என்செயும் அருவினை என்செயும் ... ... சிற்றம்பலவனார்க் கெல்லையில்லதோர் அடிமை பூண் டேனுக்கே' என்ற மனப்பான்மையுடன் மாணாக்கர்கள் மனம் வாடாமல் அச்சங்கொள்ளாமல் எதையும் எப்பொழுதும் ஆண்மையுடன் வரவேற்க வேண்டும் என

நேயர்கள் நெஞ்சம்

சைவ நீதியா? தெய்வ நீதியா?

முன்னொருநாள் நம் முதல்வன் போர் முனையில் மொழிந்தனனன்றோ! தர்மம் தலை தாழும்: அதர்மம் தலைஉயரும்—அன்று நான் தோன்றுவேன். காலத்துக்கேற்பக் கட்டி வளர்ப்பேன்; தர்மத்தை முன்னையிலும் பன்மடங்காக மேலோங்கச் செய்வேன். இவ்வுறுதி வார்த்தைகள் என்றுமே பிழைத்ததில்லை. எனவே 'மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்' என்று நாம் பாடிப் பாராட்டிப் போற்றிவந்த பாசுரப் பகுதியை மாற்றி 'மேன்மைகொள் தெய்வநீதி' விளங்குக என்று தங்கள் கூட்டுப்பிரார்த்தனைகளில் பாடிவருகிறார்கள் ஒரு கூட்டத்தினர். அவர்களுடைய கூட்டுப் பிரார்த்தனைக்குரிய பிரசுரங்களிலும் அப்படியே பதிப்பித்துமிருக்கிறார்கள். இவர்கள் யாவரோவென்று நம்மவர்கள் இன்றுவரை அறியாமலில்லை. இவர்கள் தாங்கள் 'திவ்விய ஜீவன சங்கத்தார் என்கின்றனர்.

ஊனக் கண்கொண்டு பார்க்கும் சாமான்னிய உலகத்தோரைப் போலல்லாது ஞானக் கண்கொண்டு பார்க்கும் உத்தமர்கள் உலவும் காலமாக விருக்கலாம் இக்காலம். பிரம்ம ஞான சபையைச் சேர்ந்தவர்களில் சிலர் நெற்றிக் கண் பார்வையுடையராய் விளங்கினரானம். ஆகலின் இன்று சைவ நீதி என்பது தெய்வ நீதி யாக மாறியதில் மறை பொருளிருக்கலாம். நாம் காண முயல்வோம்!

எம்மதமும் சம்மதம் என்றும், எங்குமுளான் இறைவன் என்றும், பெண்களைத் தாய் என்றும், தமிழர் சோனகர் சிங்களர் என்ற சாதி வேறுபாடின்றியும், உயர் சாதி தாழ்ந்த சாதி என்ற பகுப்பின்றியும் நாம் நடந்துகொள்ள வேண்டுமென்றும் பலர் நல்லுரை தந்து வருகிறார்கள். இவ்வுரைகளைச் சீர்தூக்கிப் பரிசீலனை செய்து நாம் உண்மை தெளிதல் வேண்டாமா? தூண்டிலிற் தொடுத்த இறையின் கவர்ச்சியால் துடி துடித்துயிர் நீத்த பெருமீனே போல் உருசிகரமான ஆசை வார்த்தைகளை நம்பி நாம் மோசம் போகலாமா? பட்டதாரிகளும், உயர் பதவிகள் வகிப்போரும் முக்குண வயத்தரே. ஆராய்வின்றிக் கீரிப்பிள்ளையைப் பார்ப்பனத்தி கொன்றுவிடவில்லையா! நாம் விழிப்பாயிருப்போம்'' 'மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்.

பொ. ஆ. சு.

மட்டக்களப்பு,

சித்தாந்தமணி திரு சி நாகையா நினைவு விழா

ஸ்ரீலங்கா சைவாதீனத்தினதும் வேதாகம சைவ சித்தாந்த சபையினதும் வருடாந்த விழா, உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலையில் (மானிப்பாய் சுன்னாகம் வீதி ஆலடிச் சந்தைக்கருகில்) வேதாகம பூஷணம் பிரம்ஸ்ரீ கு. பாலசுந்தரக்குருக்கள் B. A. அவர்களின் தலைமையில் ஞாயிறு 29-9-63 பிற்பகல் 2 மணியளவில் நடைபெறும்.

மான்ஸ் கலாசாலை அதிபர் செ. சுப்பிரமணியம் B. A. அவர்கள் தலைமை தாங்குவர். பிரம்மஸ்ரீ நா. தண்டாயுதபாணிக்குருக்கள், மகாவித்துவான் க. வேந்தனார், வித்துவான் இ. திருநாவுக்கரசு, பண்டிதர் வ. நடராசா, பண்டிதர் இ. இராமலிங்கம், சைவப்பிரசாரகர் வே கந்தையா, திரு. வி. வீரசிங்கம் B. A. உட்படப் பலர் 'மாதொருபாகனாகத் தாமே வருவர்' என்னும் பொருள்பற்றிப் பேசுவார்கள்.

புத்திமதி புகட்டினார் நீதி மன்றத்தில் நெறி நின்று நேர்மையின் சின்னமாக விளங்குபவர் ஆகையால் திரு சிவசுப்பிரமணியம் அவர்களின் உள்ளத்தில் ஊற்றெடுத்த கருத்துகள் மாணாக்கர் மட்டுமன்று ஆசிரியர்களும் பெற்றாரும் வாழ்வாங்கு வாழும் வழியைக் காட்டும் பான்மையில் அமைந்தன.

கல்வி நிலையங்களில் ஒழுக்கம் இன்றியமையாததாய் இருத்தல் வேண்டும் என்றும், பெற்றாருக்கும் பிறருக்கும், ஆசிரியருக்கும் அமைந்து ஒழுகுதல் மாணாக்கர்களின் கடமையென்றும் அரசியல் ஆரவாரங்களில் ஈடுபடுவதாகாதென்றும் வாழ்க்கையின் செம்மையால் நாட்டின் வளர்ச்சிக்கு பகாரிகளாய் இருத்தல் வேண்டுமென்றும் திரு, சிவசுப்பிரமணியம் அவர்கள் புன்னகை பூத்த மலர்ச்சியுடன் பொழிந்த சொற்பொழிவிற் பலப்பல அரிய நற்சிந்தனைகளை அறிவித்தனர். இவற்றைக் கேட்டோர் இன்புற்றது மன்றி இதயத்தில் அவற்றைப் பதித்துப் பயனுமடைவார் என்பது திணணம்.

இடிக்குந் துணையாரை
ஆள்வாரை யாரே
கெடுக்கும் தகைமை யவர்?

—:—

அணிந்துரை அரங்கம்

நவராத்திரிப் பாடல்

வெளியீடு:-

ஆத்மஜோதிப்பதிப்பகம்
நாவலப்பிட்டி,

பாரதியார், ஸ்ரீ. குமரகுருபர சுவாமிகள் தேசிகவிநாயகம்பிள்ளை, காளமேகப்புலவர், கவிச்சக்கரவர்த்தி, கம்பன், பரமகம்சதாசன், சுத்தானந்த பாரதியார், சாதுமுருகதாஸ் ஆகியோர், சரஸ்வதி, இலக்குமி, பராசத்தி முதலிய பெண்பாற் தெய்வங்கள் மேல் பாடிய துதிகள், அந்தாதிகள், மாலைகள், நாமாவளிகள், அர்ச்சனைப் பாடல்கள் ஆகியவற்றைத் தொகுத்து வெளியிடப்பட்டிருக்கும் 34 பக்கங்களைக் கொண்ட இந்தக் கையடக்கமான நூல் 1963 நவராத்திரிதினத் தேவையை நோக்கி வெளியிடப்பட்டது.

காரைநகர் தந்த சிறந்த பெரியார்

— ஒரு சைவ பரிபாலனசபை அங்கத்தவன் —

காரைநகரின் தலைமகனும் திரு. கந்தப்பர் சோமசுந்தரம் அவர்களின் புறவாழ்வு எவ்வளவு தூய்மை நிறைந்ததோ அதைப்போலவே அவரது அகவாழ்வான இல்லறவாழ்க்கையும் பெரும் சிறப்புக்குரியதாகும்.

'அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை'' என்ற வள்ளுவர் வாய்மொழிக்கு ஏற்ப வாழ்ந்து மறைந்த பெரியார் அவர். இவர் திரு. சயம்பு உபாத்தியாயரின் சிரேஷ்ட மாணவனாகப் பாடம் கற்று வந்தார். அதன்பின் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் சைவப்பெரியார் திரு. சு. சிவபாதசுந்தரம் பிள்ளையின் மாணவனாக இருந்து கல்வி கற்றார். சிறப்புப்பெற்ற அதிபர் திரு. நெவின்ஸ் செல்வத்துரையின் அன்புக்குரிய மாணவனாகவும் படித்து வந்தார்.

சுவாமி விவேகானந்தர் யாழ்ப்பாணம் வந்தகாலத்தில் இவர் இந்துக்கல்லூரியில் மாணவனாக இருந்து வரவேற்புக்கேற்ற தொண்டுகளில் பற்குபற்றினார்.

இவர் தந்தையார் திரு. சிதம்பரப்பிள்ளை கந்தப்பர் என்பவர் காரைநகர் இந்து ஆங்கில வித்தியாசாலையை ஸ்தாபிப்பதற்கு திரு. சயம்பு ஆசிரியர் அவர்கட்கு வேண்டிய உதவிகளைச் செய்தார்.

திரு. சோமசுந்தரம் அவர்கள் மலாயா சென்று அங்கு வைத்தியப்பகுதியில் உத்தியோகம் வகித்து வந்தார் இவர் தமிழ்ப்பற்றும் தேசியப் பற்றும் உடைய பெரியார்.

திரு. சோமசுந்தரம் அவர்கள் மலாயாவில் உத்தியோகம் வகிக்கும் காலத்தில் செட்டிமார்களுடன் சினேகம் கொண்டு அவர்களுடன் தனது ஓய்வு நேரத்தைக் கழித்து வந்தார். அதனால் இவரையும் "செட்டியார்" என்றே அழைப்பார்கள். காரைநகரிலும் "செட்டியார்" என்றால் எல்லாருக்கும் விளங்கும்.

இவர் காரைநகரில் கல்வி சம்பந்தமான விஷயங்களில் மிக்க ஆர்வம் உடையவராக வாழ்ந்தார். காரைநகர் இந்துக்கல்லூரியின் வளர்ச்சியில் ஊக்கம்காட்டி இப்போது அதிபராக இருக்கும் திரு ஏ. தியாகராசாவுக்கு பாடசாலையில் கட்டிடங்கள் நிறுவுதற்கு வேண்டிய உதவிகளைப்புரிந்து வந்தார். இவர் திரு. பரமு அம்பலவாணரின் மகள் கற்பிற்சிறந்த செல்லம்மாவை மணந்து இல்லற வாழ்வை நடத்தினார். இவரது இல்லாள் 22-6-61 ல் இவரைவிட்டுப்பிரிந்து இறைவனடி சேர்ந்தார். திரு, சோமசுந்தரம் தனது பிள்ளைகளின் உதவியோடு வாழ்ந்து வந்தார், இமயமலைச் சோதி ஸ்ரீலஸ்ரீ. சிவானந்த சரஸ்வதியின் ஆச்சிரமத்திற்கும் யாத்திரை செய்துள்ளார்.

எப்போதும் சிக்கனமான வாழ்க்கையை உடையவர். கதர் உடையே அணிவர், சிவதொண்டன் நிலையத்தில் நடைபெற்றுவரும் சமயப் போதனை வகுப்புகளுக்கு ஒழுங்காகச் சமுகங் கொடுத்து வந்தவர். சைவ பரிபாலன சபையின் ஒரு சீவிய அங்கத்தவராவர்.

எல்லோரும் இன்புற்று வாழவேண்டுமென்ற கொள்கையுடையவர். மேன்மையான நோக்கங்களைக் கடைப்பிடித்தவர். முதுமை வந்த போதும் யோகாசனப்பயிற்சியைக் கைவிடாது செய்து வந்தார். அப்பயிற்சியினால் நோய்க்கு இடங்கொடாமல் வாழமுடியும் என்ற திட்டமான நம்பிக்கையுடையவர். தன்னை அடைந்தவர்களுக்கெல்லாம் நற்புத்திகளைப் போதிப்பவர். இவர் 1963-ம் ஆண்டு மாசி மாதம் 13-ந் தேதி தமது 85 வயதில் இவ்வுலகைவிட்டு இறைவனடி சேர்ந்தார்.

அவர் இறுதியாகப் படித்த பாட்டு:—

ஐயுந் தொடர்ந்து விழியுஞ்
சொருகி யறிவழிந்து
மெய்யும் பொய்யாகி விடுகின்ற
போதொன்றுவேண்டுவன்யான்
செய்யுந் திருவொற்றியூருடையீர்
திருநீறுமிட்டுக்
கையுந் தொழப்பண்ணி
யைந்தெழுத்தோதவும்
கற்பியுமே.

'அவர் ஆன்மா சாந்தி அடைக'

பாரதி விழாவும் பாவரங்கும்

திருநெல்வேலி செங்குந்தா இந்துக் கல்லூரியின் பல்கலைக்கழக மன்றத்தின் ஆதரவில் அக்கல்லூரியில் சென்ற 18-9-63 புதன் கிழமை பிற்பகல் 3 மணியளவில் ஆரம்பமாகி பாரதி விழா நடைபெற்றது.

இவ் விழாவில் பிரதான நிகழ்ச்சியாக கவியரங்கம் இடம் பெற்றது.

'சேமமுற வேண்டுமெனில்' என்ற தலையங்கத்தில் கவிஞர்கள்: 'சொக்கன்' க. இராமச்சந்திரன் B. A., 'அமபி' ச. வே. பஞ்சாட்சரம், பா. சத்தியசீலன் ஆகியோர் கவியரங்கில் பங்கு கொண்டனர்.

இலக்கியப்பிரிவுகளுள் தலைசிறந்ததான கவிதையைப் படித்தும் கேட்டும் சுவைக்கும் இரசிகர்கள் தொகை நாளுக்குநாள் ஈழத்தில் பெருகிவருகிறது. இந்தநன் மாற்றத்தை, கவியரங்கினை ரசிக்கக் குழுமியிருந்த மேற்படி கலலூரியின் மாணவர்கள் நன்கு பிரதிபலித்தார்கள். கவிதைகளை நன்கு சுவைத்து மகிழ்ந்து ஆரவாரித்தார்கள்.

தொடர்ந்து பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி, புதுமைலோலன் ஆகியோர் பாரதியார் கவிதைகள்பற்றிச்சிறந்தமுறையில் சொற்பொழிவாற்றினர்.

கவிஞர் விடிவெள்ளி அவர்கள் விழாவிற்கும் கவியரங்கிற்கும் சிறந்த முறையில் தலைமைவகித்து விழாவின் சிறப்பிறகு ஏதுவாக இருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லைக்கீர்த்தனம் — 46.

கோபுரம் கண்டால்.....!

— யாழ்ப்பாணம் ந. வீரமணி —

இராகம் : திலங் : தாளம் : ஆதி

பல்லவி

ஏனடா முருகா எனக்கிந்த மோகம் ?
ஞானவேல் ஏந்திடும் மோனக் குமராஉன்மேல்

அனுபல்லவி

வானளாவிடும் நல்லைக் கோபுரம் கண்டால்
ஊனும் உயிருடலும் உருகு தடாவாதா!

சரணம்

அன்புமது ஒழுகும் ஆறுமுக மலரில்
இன்புறவே தவழும் இதழின் குறுநகையில்
என்பும் உருகுதடா இன்பம் பெருகுதடா
நின்புகழ்ப் பண்பாடி நின்மலரடி சூட்ட



போய்ச் சேருவாரா?

பெரியவர்: அகில இலங்கைச் சாராயக் குடிகாரர் சங்கம் உள் நாட்டு மந்திரியிடம் கசிப்பினாற் சாராய வியாபாரம் கஷ்சப்படுவதாக முறையிடப் 'போத்திலும்' கையுமாகப் போக எண்ணியிருக்கிறார்களாமே!

விகடன்: சாராயக் குழு போய் மந்திரியைக் காணமுன்பு கசிப்புப்போத்தலை ஒருகை பார்த்து விடுவரர்கள். அப்புறம் எங்கே போகிறார்கள் என்பதை யார் சொல்ல முடியும். கள்ளருந்துவோர் கழகமும் ஈடுபட்டாலல்லவா பொருத்தமாயிருக்கும்,

அனைத்துலக சமயம் சைவம்

—0—

முற்றொடர்—2

மத்தியதரைக் கடலைச் சூழ்ந்த நாடுகளில் சைவ சமயம் பரவியிருந்தது. இதனை வலியுறுத்தும் சான்றுகள் பல உள்ளன.

பழைய கிரீஸ்நாட்டில் சைவ சமயம் பரவியிருந்தது. கிரேக்கரின் முழுமுதற்கடவுள் சியஸ் (Zeus) சிவன் என்னும் பெயரே கிரேக்க மொழியில் சியஸ் எனத் திரிந்து வழங்கிற்று. சியஸ் கடவுள் ஒலிம்பஸ் மலை முகட்டில் இருப்பவராகவும், சா ரண இ விழிகளோடு நெற்றிக்கண் ஒன்றுடையவராகவும், கையில் இடியேற்றைத் (முத்தலைவேல்) தாங்கியவராகவும் இருந்தார். சிவ பெருமான் கயிலையிலிருப்பவர், இடப ஊர்தியினர், முக்கண்ணர், சூலப்படையினர் எனக் கொள்ளப்படுவதோடு இது முழுதும் ஒத்தி க்கின்றது.

ஆர்தர் பேர்ணாட்குக் என்னும் மேல்நாட்டறிஞர் சியஸ் (Zeus) என்னும் ஒரு பெருநூல் எழுதியுள்ளார். இவ்வுலகின் பல பாகங்களில் வழிபடப்பட்டனவும் இன்று வழிபடப்படுகின்றனவுமாகிய தெய்வங்களுள் சியஸ் கடவுளோடு ஒப்புடைய தெய்வங்கள் இந்நூலில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. இந்நூலின் இலக்கு சியஸ் வழி

திரு. ந. சி. கந்தையாபிள்ளை

பாட்டினின்று பல வழிபாடுகள் பிரிந்து சென்றன எனக் காட்டுவதாகும்.

சியஸ் கடவுளோடு ஒப்பிட்டுக் காட்டப்பட்ட தெய்வங்களில் ஒன்று பழைய சிரியா நாட்டு மக்கள் வழிபட்ட அதாத் என்னும் தெய்வம். சிரியா நாட்டில் பழைய வெண்கலத்தகடு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. அத்தகட்டில் அந்நாட்டு மக்கள் வழிபட்ட தெய்வத்தின் வடிவம் வெட்டப்பட்டுள்ளது. அத்தெய்வ வடிவம் சடாமுடியும் தாடியும் உடையதாய் இடப ஊர்தியின் மேல் நிற்கிறது. அதன் உயர்த்திய இடக்கையில் இருபக்கங்களிலும் அவருடைய கைக்கோடரி (மழு) இருக்கின்றது. அதன் தாழ்த்திய மற்றக்கையில் மேல் மூன்று முனைகளும் கீழ் மூன்று முனைகளுமுடைய சூலப்படை இருக்கின்றது. இவ்வகை சூலப்படை தென்னிந்திய கோயில்களில் அமைக்கப்பட்டிருக்கும் சிற்பங்கள் சிலவற்றில் கடவுளரின் கையிற் காணப்படுகின்றன. கீழ் மூன்று கவரும் மேல் மூன்று கவருமுடைய ஆயுதம் மத்திய தரை நாடுகளில் வாழ்ந்து மக்களால் இடியேறு என வழங்கப்பட்டது. இடப ஊர்தி தென்னிந்திய கோயில்களில் காணப்படும் இடப வாகனங்கள் போன்ற தோற்றமுடையது. அதன் நெற்றியில் குஞ்சம்போன்ற பூங்கொத்துக்கிடக்கிறது.

இவ்வழிபாடு உரோமப் போர் வீரரால் உரோமைச் சக்கராதிபத்தின் பெரும் பகுதியிற் பரப்பப்பட்டது. இத்தெய்வத்தைப்பற்றி விளக்கமளித்த மேல்நாட்டறிஞர் இஃது இந்தியாவில் வழிபடப்படும் சிவனை ஒத்துள்ளதெனக் கூறியிருக்கின்றனர். இத்தெய்வ வழிபாடு மேற்கு ஆசிய நாடுகளில் மிகப் பழமை பெற்றிருந்தது. பாபிலோனியா நாட்டை ஆண்ட அரசருள் மிகப் புகழ்பெற்றவன் அமுரபி (கி, மு. 2000) இவன் காலத்திய நீண்ட உருளை வடிவான முத்திரைகளில் முதன் முதல் சிரியநாட்டு மக்கள் வழிபட்ட அதாத் தெய்வம்போன்ற வடிவம் காணப்படுகின்றது. இதனால் கி மு. 2000—க்கு முன் சிவ வழிபாடு மத்தியதரை நாடுகளில் மிகப் பழமைபெற்றிருந்ததெனத் தெரிகிறது.

"பாண்டியநாடே பழம்பதியாகவும்" எனவும் "தென்பாண்டி நாட்டானே" எனவும் மாணிக்க வாசகசுவாமிகள் கூறியருளினார். பாண்டிநாட்டில் தோன்றிய வழிபாடு மேற்கு ஆசியாவில் 4000 ஆண்டுகளுக்கு முன் பழமை பெற்றுவிட்டதென்றால் அதன் பழமையை அளவிட்டுக் கூற முடியாது.

யாழ். இந்துக்கல்லூரி இந்துவாலிபர் சங்கம் பாரதி விழா

நாளை (21—9—63) சனிக்கிழமை மாலை 5 மணி தொடக்கம் யாழ் இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் ஷை சங்கத்தலைவர் செல்வன் சு வள்ளிகாந்தனின் தலைமையில் நடைபெறவிருக்கிறது. 'பாரதி கண்ட குழந்தை' என்ற தலைப்பில் செல்வி அன்னலக்ஷ்மி கந்தையாவும், "இழிவுக்கும் ஒரு பாட்டாம்" என்பதுபற்றி செல்வன் செ. கணேசமூர்த்தியும், "குயில்" என்ற காவியப் பற்றி திருமதி வள்ளிநாயகி இராமலிங்கம் (குறமகள்) அவர்களும், 'பாஞ்சாலி சபதம்' பற்றி திரு. க. சொக்கலிங்கம் (சொக்கன்) அவர்களும் சொற்பெருக்காற்றுவர் பாரதி கீதங்களைப் பக்கவாத்திய சகிதம் திரு. R. ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி அவர்கள் இசையமைத்துப் பாடுவார்கள்.

இவ்வாரம் 2'-9-63 — 28-9-63

உங்கள் பலன்?

[ஸ்ரீ இராதாகிருஷ்ணன் கணிப்பது]

மேடராசி அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

அந்நியரும் அயலவரும் உமது அலுவல்களில் மிக உதவுவர். எதிரிகளுக்கு இன்னல் உண்டாம் உடல்நிலைக் கோளாறுகளுக்கு இடமுண்டு, குடும்பக் கலகங்களும் உண்டாம், திங்கள் செவ்வாய் புதன் காலையை எச்சரிக்கையோடு கழிக்கவேண்டும்.

இடபராசி கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்,

தடைகளை எல்லாம் தாண்டி விடுவீர். நிலபுலங்களால் இலாபம் உண்டாம். புகழும் சமூக வெற்றியும் நிச்சயம். புதன் மாலை வியாழன், வெள்ளியை எச்சரிக்கையோடு கழிக்கவேண்டும்.

மிதுனராசி மிருகசீரிடம், 2 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1ம், ம் பாதம்.

உடல் நிலை அவ்வளவு திருப்திகரமாயிருக்காது. குடும்பக்கலகங்களும் உண்டாம். வேலை வழமையிலும் அதிகமாக இருக்கும். ஆனால் போதியளவு ஈடு செய்யப்படுவீர். நண்பர்கள் மிக உதவுவர். வார இறுதிநாளை எச்சரிக்கையோடு கழிக்குக.

கடகராசி புனர்பூசம் 4ம் பாதம், பூசம் ஆயிலியம்.

தொழில் ஈடுபாட்டிற்குச் சிறந்த வாரம். பண இலாபமும் புகழும் நிச்சயம் இனத்தவருடன் மோதலுக்கு இடமுண்டு. வண்டிகள் மூலமான தொல்லைகளும், குடும்பக்கலகமும் ஏற்படலாம்.

சிங்கராசி மகம், பூரம். உத்தரம் 1-ம் பாதம்.

சகோதரர் மிக உதவுவர். பண இலாபம் நிச்சயம். மன நிம்மதி இருக்காது. தூற்றித்திரிவோர் பற்றி எச்சரிக்கையாக இருக்கவும்.

கன்னிராசி உத்தரம் 2, 3, 4 பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

புது முயற்சிகளில் வெற்றி நிச்சயம். பணமளவில் நல்ல வாரம் சிறு உடல்நிலைக் கோளாறுகள் உண்டாம் வண்டிகள் காரணமான தொல்லைகளுண்டாம்.

துலாம், சித்திரை 3 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.

உடல் நிலையில் குழப்பம் ஏற்படலாம். எளிதில் பொறுமை இழப்பீர். இனத்தவருடன் மோதல் உண்டாம். செலவு பெருகும்.

விருட்சிகராசி விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

விவசாய வெற்றியும். பழைய முதலீட்டில் நற்பயனும் ஏற்படும். உடல் நிலை ஊறுபடும் கண்ணோய்களுக்கிடமுண்டு.

தனுராசி மூலம், பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

குடும்ப நிலைமை குழம்பலாக இருக்கும். சண்டைகளைக் கட்டிக் கொள்வதில் முந்தி நிற்பீர். தொழிலளவில் நல்ல வாரம். பண இலாபங்களும் உண்டாம்.

மகாராசி உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.

எதிரிகளை வெல்வீர், நிலபுலங்களால் இலாபம் உண்டாம். மன நிம்மதி இருக்காது. செலவுகள் பெருகும்.

கும்பராசி அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்.

பணமளவில் நல்ல வாரம். புது முயற்சிகள் தடங்கல்படும். ஆனால் வெற்றிபெறும். உடல் நிலை பிரச்சினைக்குரியது. வயிற்றுக் கோளாறுகளுக்கு இடமுண்டு.

மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.

இனத்தவருடன் மோதலுக்கு இடமுண்டு. அலுவலகத்தில் கலகங்களுக்கு இடமுண்டு, உடல் நிலைபிரச்சினையாகும். பழையமுதலீடுகள் நற்பயன்தரும் வாரமுதல் நாளை எச்சரிக்கையோடு கழிக்குக.

அநுதாபத் தீர்மானம்

நல்லூர் தெற்கு சனசமூக நிலையத்தில் திரு த. இராசரத்தினம் தலைமையில் 15-9-63ல் நடைபெற்ற கூட்டத்தில் திருமலை பா. உறுப்பினர் திரு. இராஜவரோதயத்தின் மறைவு குறித்து இருநிமிடங்கள் மௌனம் அநுட்டிக்கப்பட்டது.

தலைவர் குறிப்பிடுகையில், அன்னார் ஓர் அரசியல் ஞானி மாத்திரமன்றிச் சமயப் பணிகளிலும் மேம்பட்டவரெனவும், திருக்கோணேஸ்வர ஆலய புனருத்தாரணத்திற்கு, திரு இராஜவரோதயமே முக்கியஸ்தர் எனவும் குறிப்பிட்டு அப்பெரியாரின் குடும்பத்தினர்க்கு அநுதாபச் செய்தியை அனுப்பி வைக்க வேண்டுமென்றும் பிரேரிக்க திரு. சி. வயித்திலிங்கம் அநுவதிக்கச் சபையோர் ஏகமனதாக அங்கீகரித்தனர்.

இச்சனசமூக நிலைய இளைஞர் கழகத்தாரால் நடாததப்படும் இரவுநேரப் பயிற்சி மன்றத்தில் இப்பொழுது 63 மாணவ மாணவிகள் பயிற்சி பெறுகின்றமையால் சனசமூக நிலையக் கட்டிடத்தை விஸ்தீரணஞ் செய்து மன்றத்தை நிலையத்தில் நடாத்த வேண்டுமென திரு சி. பரமநாதன் பிரேரிக்க அதனை திரு வி. சீ. குஞ்சிதபாதம் அநுவதிக்க சபையோர் ஏகமனதாக அங்கீகரித்தனர்.

தனாதிகாரி திரு இ. செல்வமாணிக்கராசா வரவு செலவுக் கணக்கை வாசித்தார். செயலாளர் திரு. பொ புண்ணியசிங்கத்தின் நன்றியுரையுடன் கூட்டம் இரவு 11மணி வரையில் நிறைவேறிற்று.

கோட்டு விற்பனவு விளம்பரம்

காட்டு வளவில் கோவில் கொண்டருளியிருக்கும் உசன் கந்தசுவாமி கோவில் தர்மகர்த்தாக்கள்.

உசன்

1. கந்தையா சுவாமிநாதர் கரம்பன்
2. கந்தையா வினாசித்தம்பி
3. சந்திரசேகரி இராசரத்தினம் வழக்காளிகள்.

இல. 1832

எதிராக

உடுவில்

1. பொன்னம்பலம் நாகலிங்கம்
2. பெண் நாகலட்சுமி மல்லாகம்
3. யாழ்ப்பாணம் மத்திய பஸ் கம்பனியின் தொழிலாளர் சேமநிதிச் சங்கம்.

வதுளை

4, கே. வேலுப்பிள்ளை நடராசா -எதிராளிகள்.

சாவகச்சேரி டிஸ்திறிக்கோட்டில் 1832ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணி 1963ம் ஆண்டு அக்டோபர் (ஐப்பசி) மாதம் 5ம் திகதி (5—10—63) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபா 6757—70ம், இதில் ரூபா 4975-க்கு 6—10—59 திகதிதொடக்கம் 9—2—60 திகதி வரைக்கும் 100 க்கு 10 வீத வட்டியும் பின் திகதி தொடக்கம் முழுத்தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 100 க்கு 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 287-85 சதம். இதில் ரூபா 4000-00 இறுபட்டது. மேலும்செலவு ரூபா 36ம்.

காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி உடுவிற் கோவிற்பற்று உடுவிலிறை 'பெரியபுலம்' நிலப்பரப்பு 11-ம் குளி 8 8/5-ம் இதில் கிழக்குப்பக்கமாக நிந்தமாக நிலப்பரப்பு 5—ம் குளி 12 5/16ம் இக்காணியில் இருக்கும் கல்வீட்டில் கிழக்குப் பக்கமாக அரைவாசியும், செய்பயிர் வான்பயிர்களும் கிணறும் வடகிழக்கேயிருக்கும் கிணற்றில் பங்கும் வழிவாய்க்காலும். ஆனால் குறித்த கிணற்றில மேற்கே மிகுதிக் காணிக்குரிய அரைவாசிப்பங்கும். வழிவாய்க்காலும். எல்லை கிழக்கு கனகசபை பெண் செல்வரத்தினத்தின் ஆதனம். வடக்குகந்தையா பெண் மாணிக்கத்தின் ஆதனம். மேற்கு மிகுதி ஆதனம். தெற்கு கை ஒழுங்கை. இதடங்கலும் முற்பதிவு H 282/57.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner, Valuer, & Licenced Auctioneer.
தெல்லிப்பழை, 2—8—1963.
M 138, 20—9—63.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

எஃப். ஜீவாஜி சகோதரர்கள்

மொத்த, சில்லறை வியாபாரிகள்

அச்சுக்கந்தோர்களுக்கும், பாடசாலைகளுக்கும் தேவையான காகிதம், அச்சடிக்கும் மைகள், பாடசாலை உபகரணங்கள், பாண்சாலைகளுக்கான 'கேக்' பெட்டிகள், கடுதாசிப்பைகள், வியாபாரிகளுக்கான என்வலப்புகள், நூல், மை, கொப்பி, பென்சில், பேனை, பலவித மட்டைகள், சோடனைக்கடுதாசிகள் என்பன எம்மிடம் மொத்தமாகவும், சில்லறையாகவும் மலிந்த விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

எஃப். ஜீவாஜி சகோதரர்கள்,

ஜூபிலி பஜார், இலக்கம் 9, (ராணி சினிமாவுக்கருகில்)
மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

தலைமைக்காரியாலயம்: கிளை:-
ஜீவாஜி சகோதரர்கள், இன்டிப்பென்டன் ரேடிங்கோம்பனி,
50. புதிய சோனகதெரு கொழும்பு-12 51A, 1-ம் குறுக்குத்தெரு
கொழும்பு – 11

தொழிற்சாலை: 146, புதிய சோனகத்தெரு, கொழும்பு 12

பாரதியார்

கடவுள் நம்பிக்கை இல்லாதவரா?

யாழ்ப்பாண மத்திய கல்லூரித் தமிழ்மன்றம் வியாழக்கிழமை (12 - 9 - 63) பாரதி விழாக் கொண்டாடியது.

செல்வன் கு. சிற்றம்பலம் "பசுந் தமிழ்த்தாய்" என்ற தொடக்கத்தையுடைய பாடலைப் பாடித் தமிழ்த்தாய்க்கு அஞ்சலி செலுத்தினர். விழாவுக்குத் தலைமைதாங்கிய செல்வன் வ. பாலசுங்கம் பாரதியாரைப்பற்றிச் சுருங்கக் கூறிப் பேச்சாளர்கள் இருவரையும் அறிமுகப்படுத்தினர்.

முதலாவதாகச் சொற்பொழிவாற்றிய பண்டிதர் க. சச்சிதானந்தன் B.A (HONS) சாத்வீகப் போராட்டத்தைக் குறிப்பிட்டு "பாரதியார் வாழ்ந்த காலத்தில் வெள்ளையரின் ஆட்சியை எதிர்த்துப் பாரதநாடு சுதந்திரத்துக்காகப் பாடுபடவேண்டியிருந்தது என்று கூறினர்".

"தூங்கிக்கிடந்த சமுதாயத்தைத் தட்டியெழுப்பிய பாரதியார்" "விடுதலை, விடுதலை, விடுதலை' என்று உரத்துப்பாடி விடுதலை வேட்கையை மக்கள் மனத்தில் உண்டுபண்ணினார் என்றும் சொன்னர். மேலும், இரண்டாவதாகப் பேசிய பண்டிதர் க. இராஜரத்தினம் B.O.L. பாரதியாருக்கு எத்தனையோ மொழிகள் தெரியும் என்றும், அத்தனை மொழிகளிலும் தமிழ்மொழிபோல் இனிதான மொழியை எங்கும் அவர் காணவில்லையென்றும் கூறினர், பலர் கேள்விப்படாத சில பாட்டுக்களையும் பாரதியார் கவிதைகளிலிருந்து எடுத்துக்காட்டிய அன்னர் பாரதியாரின் கடவுட்கொள்கையை மாணவர்கள் மனத்தில் பதிய வைத்தார். "தனி ஒருவனுக் குணவில்லையெனில் சகத்தினை அழித்திடுவோம்" என்று பாரதியார் பாடியதைக் கொண்டு அவர் கடவுள் நம்பிக்கையில்லாதவர் என்று நாம் எண்ணிவிடக்கூடாது என்றும் கூறினர்.

இறுதியாகக் காரியதரிசி செல்வன் வ. கருணானந்தன் நன்றியுரை கூறினர்.

கந்தையாபிள்ளை.....

1-ம் பகுதித் தொடர்ச்சி

ஏற்று இதன் செவிலித் தாயாக இருந்து இதனை வளர்த்தார்கள். அவர்கள் தொட்டதெல்லாம் தழைக்கும் பேற்றினை உடையவர்கள். இக்கல்லூரியின் நிர்வாகம் இப்பொழுது அரசாங்கத்தின்கீழ் வந்தாலும் அவர்களது உதவி தொடர்ந்திருந்தால்தான் இது மேன்மேலும் அபிவிருத்தி அடையமுடியும்.

அரசாங்கம் பள்ளிக்கூடங்களின் பொறுப்பை ஏற்றிருந்தாலும், பள்ளிக்கூடங்களை இதுவரையில் பரிபாலித்த மக்களது உதவி தொடர்ந்திருத்தல் அவசியம் என்பதை மக்கள் மறந்துவிடக்கூடாது. இக்கல்லூரியின் பழைய மாணவர்களும், இப்பொழுதுள்ள மாணவர்களின் பெற்றோர்களும் இக்கல்லூரியைத் திரு கந்தையா அவர்களின் ஞாபகச் சின்னமாகக் கருதி, இதன் அபிவிருத்திக்கு வேண்டுவன எல்லாம் செய்வதற்குக் கடமைப்பட்டுள்ளார்கள் இக்கல்லூரி பலவகையிலும் மேன்மேலும் சிறப்படைந்து ஓர் உயரிய சைவக் கல்வித்தாபனமாக விளங்க வேண்டுமென்று இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

சுகம்பெற வழி

—o—

நீரில் விழுந்தவன் கரையை அடைய விரும்புவதுபோலவும், வழிப்போக்கன் களைப்பால் மரநிழலை அடைய விரும்புவது போலவும், மழைக்குப் பயந்தவன் சிறந்த வீட்டையடைய விரும்புவது போலவும், அதிதி இல்லறதர்மத்தானைச் சென்றடைவது போலவும், ஏழை தார்மீகப் பிரபுவைச் சென்றடைவது போலவும், இருட்டில் வருந்துபவன் நீபத்தை விரும்புவது போலவும், குளிரில் வருந்துபவன் சுவாலித்தெரியும் நெருப்பைச் சென்றடைவதுபோலவும், ஓ மனமே! எல்லாப் பயத்தையும் அகற்றும் சிவனது பாத தாமரைகளை நீ சுகப்பெறச் சென்றடைவாயாக.

— சிவானந்த லஹரி

யாழ்ப்பாணம்

ஐக்கிய இலாப நிதி

1918-ம் ஆண்டு ஸ்தாபிதமானது

100 ரூபா விதமான 5000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

சேமிப்புப் பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒருவிதத வட்டியுடன் சேமிப்புப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட கேமப் பணம்

கேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 6 விதமும் 8 விதமுமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை

என் மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை

சிறுப்பர்.

Std. 14.

கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M,B. 4879.

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக்கோட்டில்
அச்சுவேலி வடக்கு
முருகன் சுணபதி
—வழக்காளி.

எதிராக

அச்சுவேலி வடக்கு
1. பரமு கணபதிப்பிள்ளையும்
2. பெண் செல்லம்மாவும்
—எதிராளிகள்,

யாழ்ப்பாண டிஸ்திறிக்கோட்டில் M.B. 4879-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக காணியை 1963-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 30-ம் திகதி (30-10-63) புதன்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபா 3280/- இன்னும் ரூபா 2000-க்கு 11-6-62 தொடக்கம் 1 - 11 - 62 வரைக்கும் 100-க்கு 10 வீத வட்டியும் பின்பு கூட்டுத தொகைக்கு இறுபடும் வரையும் 100-க்கு 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 224/62 சதம். இதில் ரூபா 125 ஏற்றுக்கொள்ளப்பட்டது.

காணி விபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக், வலிகாமம் கிழக்கு, அச்சுவேலி கோவிற்பற்று, அச்சுவேலி வடக்கிறை "இலங்கர் சிட்டியும், குண்டாணி சீமாவும், பொதுக்கன்சீமாவும்" பரப்பு கில. இலா. 24½. இதில் மேற்குப் பக்கமாக பிரிக்கப்பட்ட பர. கில. இலா. ஆறு. குளி மூன்றும், கிணறும், வீடுகளும், பயிர் வகைகளும். எல்லை கிழக்கு சீனியர் கந்தசாமியினுதனம். வடக்கு கார்த்திகேசு மகன் கல்லம்மாவுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். மேற்கு பொன்னையா பெண் கண்மணிக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். தெற்கு ஒழுங்கை. இதடங்கலும்.

தா. செல்லையா,
கொமிசனரும்.விலைமதிப்பாளரும்
இல: 37.
கொழும்புத்துறை வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
14-9-63.
M 135 20-9-63.

கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக்கோட்டிலே

அச்சுவேலி வடக்கு
1. முத்துத்தம்பி தங்கராசாவும் பெண்
2. இராசம்மாவும்
—வழக்காளிகள்.

வழ. இல. M.B. 4846.

எதிராக

அச்சுவேலி வடக்கு
1. மத்தேசு தேவசகாயமும்
2. பெண் மரியம்மாவும்
—எதிரிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B. 4846-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கட்டளைப் படி கீழே விபரிக்கப்படும் காணி 1963-ம் ஆண்டு அக்டோபர்மீ 22உ செவ்வாய்க்கிழமை (22-10-1963) முற்பகல் 10 மணி தொடக்கம் அக்காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபா 1825-ம். மேலும் ரூபா 1500-க்கு 25-5-1962 தொடக்கம் 11-10-62 வரை 8 வீத வட்டியும் கூடிய தொகைக்கு 11-10-62 தொடக்கம் இறுபடும் வரை 5 வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபா 196-10-ம். ஆனால் செலவால் ஏறுபட்ட தொகை ரூபா 100 கழிபட வேண்டும்.

காணியின் விபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பகுதி அச்சுவேலிகோவிற்பற்று அச்சுவேலி இறை "கொட்டைப் புளியடி" (கில. பர 3 குளி 12½) நிலப்பரப்பு மூன்று குளி பன்னிரண்டேகாலும், கல்விடும். எல்லை கிழக்கும் தெற்கும் வெள்ளவாய்க்கால், வடக்கு சிததர் கந்தையாவினுதனம். மேற்கு காலஞ்சென்ற முருகன் சரவணையினுதனம். இதடங்கலில் நிலத்திற் சொரியலாய் அரைவாசியும் இதற்குரிவகைகளும், குறித்த கல்வீடு இந்தமாகவும்.

செ. இரத்தினசபாபதி
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
ஸ்ரேசன் ரோட்,
கோண்டாவில் மேற்கு.
கோண்டாவில்.
16-9-63.
M 137 20-9-63

கோட்டு விற்பனவு விளம்பரம்

இல M. B. 4336.

1. கந்தர் செல்லையாவும் மனைவி
2. பொன்னுச்சி

உரும்பிராய் தெற்கு
—வழக்காளிகள்.

எதிராக

சுவாமினுதர் சுப்பிரமணியம்
கோப்பாய் தெற்கு

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 4336-ம் இலக்க வழக்கில் எனக்குக கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் காணி 1963ம் ஆண்டு ஐப்பசி மாதம் 19உ சனிகிழமை முற்பகல் 10.30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- ரூபா 2229-50 ம் 20-10-61 தொடக்கம் 12-7-62 வரையில் ரூபா 2000-ற்கு 10 வீத வட்டியும் அதன்பின் பணம் முற்றுக இறுபடும்வரையில் முழுத தீர்வைத் தொகைக்கு 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 171-07½ யும். செலவால் ஏற்கனவே கொடுகப்பட்ட ரூபா 100 கீக்கி.

ஆதனடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பகுதி கோப்பாய் கோவிற்பற்று கோப்பாய் தெற்கிறை "வேம்பிராயன் வயல், நெல் பரப்பு 17½ இதற்கு எல்லை கிழக்கு தம்பிப்பிள்ளை முதலியார் கைம்பெண் வள்ளியம்மையின் ஆதனம். தெற்கும் வடக்கும் சுவாமினுதர் சுகுலேசுவரரின் ஆதனம். மேற்கு அதிகார் நாகலுதரினகம் சுவாமினுதர் பெண் வள்ளியம்மையினதும் உரிமைக்காரரின் ஆதனமும். சுவாமினுதர் பெண் வள்ளியம்மைக்குரிய ஆதனத்தின் மேற் கெல்லைக் காணியின் வடக்குப் புறமாயுள்ள பாதையின் பாவிப் புருத்தும் தெற்குப் புறமாகவிருக்கும காணியின் வடகெல்லையிலிருக்கும் கிணற்றுப் பக்கும். வழிவாய்க்கால் பாவிப்புருத்தும்.

க. செல்வத்துரை
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
மூருகன் இல்லம்,
இணுவில், 11-9-63.
M. 133 20-9-63.

கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக் கோட்டிலே
அச்சுவேலி வடக்கு
வேலன் ஞானம்
-வழக்காளி

எதிராக

வழ இல M B. 5035
சிங்கப்பூர் ஐசேக் செல்வடுறையோன் மகள ஹேறஸ் செல்வமலர் தனது பிரதிகாரகனுக. உடுவில் இராசரெத்தினம் இராசதுரை. எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 5035 ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி கீழே விபரிக்கப்படும் காணி 1963ம்ஆ அக்டோபர் மீ 22உ செவ்வாய்க்கிழமை (22-10-1963) முற்பகல் 11 மணி தொடக்கம் அக்காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில்விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபா 2792. மேலும் ரூபா 1750க்கு 28-8-1962 தொடக்கம் 18-3-1963 வரை 6 வீதவட்டியும் கூடிய தொகைக்கு 18-3-1963 தொடக்கம் இறுபடுவரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 205 சதம் 12.

காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி அச்சுவேலிகோவிற்பற்று அச்சுவேலி வடக்கு இறை செம்பி சீமா நில பர 4 செய்பயிர் வான் பயிர்களும் எல்லை கிழக்கும்மேற்கும் ஒழுங்கை. வடக்கு வழக்காளியின் ஆதனம். தெற்கு அருளம்பலம் பெண் சின்னப்பிள்ளையின் உருமைக்காறரின் ஆதனம். இதடங்கலும்.

செ. இரத்தினசபாபதி,
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
ஸ்ரேசன் ரோட்.
கோண்டாவில் மேற்கு
கோண்டாவில், 16-9-63.
M. 136 20-9-63.

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில் யாழ்ப்பாணம் பிறவுண்வீதி, 2ம் ஒழுங்கை, 2ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. ஐயம்பிள்ளை சின்னத்துரை அவர்களால் 20-9-1963 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது

ஆசிரியர்: நம. சிவப்பிரகாசம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org